# தமிழ்நாடு மாநிலம்- பொது அறிவு கேள்வி மற்றும் பதில்கள் தமிழில்

**Q1.** "நல்ல" எனும் அடைமொழியைப் பெற்ற நூல் எது?
Which book is nicknamed as 'Nalla'?
(a) ஐங்குறுநூறு
(b) குறுந்தொகை
(c) அகநானூறு
(d) நற்றிணை

**Q2.** 'சோவியத்து அறிஞர் தால்சுதாய் வழிகாட்டுதலால், திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க விரும்பியே தமிழ் பயிலத் தொடங்கினேன்' என்று கூறியவர் யார்?
Who said "Under the guidance of the Soviet scholar Talsudai, I began to study Tamil, wanting to read the Thirukkural source directly"?
(a) ராபர்ட் கால்டுவெல்
(b) காந்தியடிகள்
(c) ஜி.யு.போப்
(d) ஜவஹர்லால் நேரு

**Q3.** கவி காளமேகம் எந்த சமயத்திலிருந்து எந்த சமயத்திற்கு மாறினார்?
From which religion to which religion did the poet Kalamekam change?
(a) வைணவத்திலிருந்து சைவத்திற்கு
(b) வைணவத்திலிருந்து பௌத்தத்திற்கு
(c) சைவத்திலிருந்து வைணவத்திற்கு
(d) சைவத்திலிருந்து சமணத்திற்கு

**Q4.** மேதையில் சிறந்ததன்று என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுவது-
To which does, Mudumozhikanchi refers to as the best in genius?
(a) கண்ணஞ்சப்படுதல்
(b) வாய்மை
(c) கற்றது மறவாமை
(d) ஒழுக்கம் உடைமை

**Q5.** எஸ்.பி.சேதுராமன் எந்த விளையாட்டைச் சேர்ந்தவர்?
S.P.Sethuraman belongs to which of the following sports?
(a) ஹாக்கி
(b) பூப்பந்து
(c) மட்டைப்பந்து
(d) சதுரங்கம்



**Q6.** உத்தரவேதம் எனும் மற்றொரு பெயர் கொண்ட நூல் எது?
Which book is also known as Uttaravedam?
(a) தொல்காப்பியம்
(b) சிலப்பதிகாரம்
(c) நான்மணிக்கடிகை
(d) திருக்குறள்

**Q7.** திருக்குறளை முதன்முறையாக லத்தீனில் மொழி பெயர்த்தவர் யார்?
Who was the first to translate Tirukkural in Latin?
(a) கிரஹாம் ஸ்டெய்ன்ஸ்
(b) ஜோசப் பெஸ்கி
(c) கால்டுவெல்
(d) ஜி.யு.போப்

**Q8.** திருநெல்வேலியின் திருத்தூதர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
Who was known as the Apostle of Tirunelveli?
(a) பீட்டர் பெர்சிவல்
(b) வில்லியம் கேரி
(c) ஸ்டான்லி ஜோன்ஸ்
(d) ஈவால்ட் ரேனியஸ்

**Q9.** பின்வரும் எந்த நூல், நாடகப்பாங்கில் அமைந்த நூலாகும்?
Which of the following books is in the form of a playwright?
(a) கலித்தொகை
(b) ஐங்குறுநூறு
(c) அகநானூறு
(d) குறுந்தொகை

**Q10.** பின்வரும் எந்த நூல், சேரமன்னர்களை பற்றிய பாடல்களை கொண்டுள்ளது?
Which of the following books contains songs about the Chera rulers?
(a) பரிபாடல்
(b) கலித்தொகை
(c) பதிற்றுப்பத்து
(d) குறுந்தொகை

**Q11.** சேக்கிழார் எந்த மாவட்டத்தில் பிறந்தவர் ஆவார்?
In which of the following districts was Sekkizhaar born?
(a) காஞ்சிபுரம்
(b) திருவண்ணாமலை
(c) தஞ்சாவூர்
(d) திருவாரூர்

**Q12.** சுவேதாரண்யர் என்ற இயற்பெயரை கொண்டவர் யார்?
Whose birth name was Shwetharanyar?
(a) பட்டினத்தார்
(b) சிவவாக்கியர்
(c) பத்திரகிரியார்
(d) அகத்தியர்

**Q13.** ஞானரத்தினக் குறவஞ்சி எனும் நூல் யாரின் படைப்பாகும்?
Whose work is the book 'Gnanarathinak Kuravanchi'?
(a) கடுவெளிச் சித்தர்
(b) திருமூலர்
(c) பீர் முகமது
(d) உரோமரி

**Q14.** சங்ககாலத்தில் சிறந்த உழவர்களுக்கு, அக்காலத்து மன்னர்கள் வழங்கிய பட்டம் எது?
Which title was given by the kings of the Sangam period to the best farmers of that time?
(a) நாயகன்
(b) காவிதி
(c) ஏனாதி
(d) எட்டி

**Q15.** பின்வரும் எந்த நூல், "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்று கூறுகிறது?
Which of the following books says, "Those who seek to see God are devotees; those who have seen and got enlightened are Saints"?
(a) தேவாரம்
(b) மணிமேகலை
(c) நாலடியார்
(d) வளயபதி

**Q16.** தக்கயாகப்பரணி எனும் நூல் யாரால் இயற்றப்பட்டது?
By whom was the book 'Thakkayakaparani' written?
(a) ஒட்டக்கூத்தர்
(b) அரிசில் கிழார்
(c) கௌனியனார்
(d) மெய்கண்டதேவர்



**Q17.** 'தென்மொழி' என்ற தனித்தமிழ் இதழை நடத்தியவர் யார்?
Who is the founder of the unique Tamil magazine 'Thenmozhi'?
(a) பெருஞ்சித்திரனார்
(b) கார்மேக கோனார்
(c) புலமைப்பித்தன்
(d) சிவ பிரகாசர்

**Q18.** ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், யாருடைய அரண்மனையில் எழுத்தராக பணிபுரிந்தார்?
Teacher Pillai Perumal Iyengar worked as a clerk in whose palace?
(a) விஸ்வநாத நாயக்கர்
(b) ராணி மங்கம்மாள்
(c) ராஜ கோபால தொண்டைமான்
(d) திருமலைநாயக்கர்

**Q19.** பின்வரும் எது பாண்டியர்களின் ஓவியக்கலை வளர்ச்சியை பறைசாற்றுவது?
Which of the following describes the development of painting in the Pandyan age?
(a) சித்தன்னவாசல்
(b) மதுரை
(c) மானமாமலை
(d) தொண்டி

**Q20.** தமிழ்நாட்டின் முதல் இந்திய ஆளுநர் யார்?
Who is the first Indian governor of the state of Tamil Nadu?
(a) கிருஷ்ண குமாரசிங்
(b) பிரகாசம்
(c) பிஷ்ணுராம் மேதி
(d) சந்திரா ரெட்டி

**Q21.** In which district is Kalpakkam situated?
கல்பாக்கம் எந்த மாவட்டத்தில் உள்ளது?
(a) சென்னை
(b) காஞ்சிபுரம்
(c) செங்கல்பட்டு
(d) திருவள்ளூர்

**Q22.** சென்னையைச் சுற்றி எத்தனை மாவட்டங்கள் உள்ளன?
How many districts surround Chennai?
(a) 2
(b) 3
(c) 4
(d) 5

**Q23.** கூடங்குளம் அணுமின் நிலையம் எந்த வெளிநாட்டின் உதவியுடன் உருவாக்கப்பட்ட அணுமின் நிலையம் ஆகும்?
Kudankulam Nuclear Power Plant is a nuclear power plant developed with the help of which foreign country?
(a) USA
(b) ரஷ்யா
(c) ஜப்பான்
(d) ஜெர்மனி

**Q24.** அமீர் மஹால் எந்த இடத்தில் அமைந்துள்ளது?
In which place is the Amir Mahal situated?
(a) ஆற்காடு
(b) ராணிப்பேட்டை
(c) மயிலாப்பூர்
(d) ராயப்பேட்டை

**Q25.** வடுவூர் பறவைகள் காப்பகம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
In which district is the Vaduvoor Bird Sanctuary located?
(a) ராமநாதபுரம்
(b) திருவாரூர்
(c) செங்கல்பட்டு
(d) கடலூர்

**Q26.** ஏகாம்பரேஸ்வரர் கோவில் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
In which district is the Ekampareswarar Temple located?
(a) கும்பகோணம்
(b) தஞ்சாவூர்
(c) மதுரை
(d) காஞ்சிபுரம்

**Q27.** சென்னையில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கம், கீழ்க்கண்ட எந்த விளையாட்டிற்கான அரங்கம் ஆகும்?
Mayor Radhakrishnan Stadium in Chennai is a stadium for which of the following sports?
(a) கிரிக்கெட்
(b) கால்பந்து
(c) ஹாக்கி
(d) மேற்கூறிய அனைத்தும்



**Q28.** தமிழ்நாட்டின் மிகச்சிறிய தேசிய பூங்கா எது?
Which is the smallest National Park in Tamilnadu?
(a) முக்கூர்த்தி தேசிய பூங்கா
(b) கிண்டி தேசிய பூங்கா
(c) மன்னார் வளைகுடா தேசிய கடல்சார் உயிரியல் பூங்கா
(d) மேற்கூறிய எதுவும் இல்லை

**Q29.** Which is the biggest reservoir in the district of Tirunelveli?
திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கம் எது?
(a) மணிமுத்தாறு
(b) குண்டாறு
(c) சித்தாறு
(d) மணலாறு

**Q30.** திருமூர்த்தி அணை எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது?
Across which river is the Thirumoorthi dam built?
(a) நொய்யல்
(b) பாலாறு
(c) பவானி
(d) ஆழியார்

## SOLUTIONS

**S1. Ans.(b)**
**Sol.** குறுந்தொகை :- 'நல்ல' எனும் அடைமொழி பெற்ற நூல்.
நற்றிணை:- 'நல்' எனும் அடைமொழி பெற்ற நூல்.

**S2. Ans.(b)**
**Sol.** சோவியத்து அறிஞர் தால்சுதாய் வழிகாட்டுதலால், திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க விரும்பியே தமிழ் பயிலத் தொடங்கினேன் - காந்தியடிகள்

**S3. Ans.(a)**
**Sol.** காளமேகம் 15 ஆம் நுற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர் ஆவார். வைணவ சமயத்தில் பிறந்த இவர், திருவானைக்கா கோவிலைச் சேர்ந்த மோகனாங்கி என்பவளிடம் ஆசை கொண்டார். இதனால் தனது சமயத்தை விட்டு மோகனாங்கி சார்ந்திருந்த சைவ சமயத்துக்கு மாறினார்.

**S4. Ans.(c)**

**Sol.** மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை - கல்வியில் பெரிய மேதையாய் வல்லமை பெற்று இருப்பதைக் காட்டிலும், கற்ற வரைக்கும், மறவாமல் அதன்படி ஒழுகுதல் சிறந்தது.




**S5. Ans.(d)**

**Sol.** சேதுராமன் பனையப்பன் சேதுராமன் (Sethuraman Panayappan Sethuraman) ஓர் இந்திய சதுரங்க கிராண்ட்டு மாசுட்டர் ஆவார்.

**S6. Ans.(d)**

**Sol.** திருக்குறளின் வேறு பெயர்கள்:

உலகப்பொதுமறை, வாயுறை வாழ்த்து, பொதுமறை, பொய்யாமொழி, தெய்வநூல், உத்தரவேதம், தமிழ்மறை, முப்பால், திருவள்ளுவப்பயன், திருவள்ளுவம், பொருளுரை, முதுமொழி.

**S7. Ans.(b)**

**Sol.** நூற்றுக்கு மேற்பட்ட உலகப் பெருமொழி களில் பெயர்க்கப்பட்டுள்ள உலகப் பெருநூலாகிய திருக்குறள், ஐரோப்பிய மொழிகளின் முதன்மை மொழியாகிய இலத்தீனில் வீரமாமுனிவரால் முதன் மையாகப் பெயர்க்கப்பெற்றது. வீரமாமுனிவர் (நவம்பர் 8, 1680 - பெப்ரவரி 4, 1747) இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன் என்னும் இடத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் - கான்ச்டன்டைன் சோசப்பு பெச்கி (Constantine Joseph Beschi).

**S8. Ans.(d)**

**Sol.** சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் ரேனியஸ் (Charles Tleoplilus Ewald Rhenius) ஐயர் (நவம்பர் 5, 1790 – ஜூன் 5, 1838) தமிழ்நாட்டில் கிறித்தவ மதப் போதகராகப் பணியாற்றியவர். இவர் கிறித்தவ சமயப் பணியுடன் தமிழ் இலக்கியப் பங்களிப்பும் செய்தவர்.

**S9. Ans.(a)**

**Sol.** கலித்தொகை:-

- ஏறுதழுவுதல் பற்றி கூறும் நூல்.
- நாடகப்பாங்கில் அமைந்த நூல்.
- கலிட்பா’வால் அமைந்த நூல்
- கடவுள் வாழ்த்து பாடியவர்-நல்லந்துவனார்.
- முதன்மை கடவுள் – சிவன்.
- பெறுந்திணைப்பாடல் இடம்பெறும் சங்ககால நூல்.

**S10. Ans.(c)**

**Sol.** பதிற்றுப்பத்து:-

- 10 சேரமன்னர்களைப்பற்றி 10 பாடல் வீதம் 100 பாடல்கள் கொண்டுள்ளது.
- முதல் 10ம் இறுதி 10 ம் கிடைக்கவில்லை.
- முழுவதும் பாடாண்திணையால் அமைந்த நூல்.

**S11. Ans.(a)**

**Sol.** சேக்கிழார் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் ஆகும்.

**S12. Ans.(a)**

**Sol.** பட்டினத்தார்:

- இயற்பெயர் சுவேதாரண்யர்
- பெற்றோர் சிவநேச செட்டியார் – ஞானகலை ஆச்சி ஊர் காவிரிப்பூம் பட்டினம்
- பட்டினத்து வணிகர் ஆதலால் பட்டினத்தார் எனப்பட்டார்.
- இவருக்குத் திருவெண்காடர் என்ற பெயரும் உண்டு
- இவரின் சீடர் பத்திரகிரியார்
- அடக்கம் பெற்ற தலம் திருவொற்றியூர்.

**S13. Ans.(c)**

**Sol.** இசுலாமிய மெய்ஞ்ஞானிகளின் சுடர் விளக்காகத் திகழ்ந்தவர் பீர் முகம்மது. இவரின், திருநெறி நீதம் எனும் இலக்கியம் புகழ்பெற்றதாகும். இவர் படைத்த, ஞானரத்தினக் குறவஞ்சி எனும் நூல் பதினெண் சித்தர்கள் தொகுப்பில் உள்ளது.

**S14. Ans.(b)**

**Sol.** காவிதி என்பது சிறந்த உழவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம். நாயகன் என்பது சிறந்த கடல்வணிகனுக்கு வழங்கப்பட்ட பட்டம். எட்டி என்பது சிறந்த உள்நாட்டு வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம்.

**S15. Ans.(a)**

**Sol.** கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்' என்று தேவாரம் கூறுகிறது.

**S16. Ans.(a)**

**Sol.** இயற்பெயர் – ஒட்டக்கூத்தர்

சிறப்புப் பெயர் – கவிச்சக்கரவர்த்தி

சிறப்பு – விக்கிரமசோழன்

இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர்.



இயற்றிய நூல்கள்:
1. மூவருலா
2. தக்கயாகப்பரணி
3. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
காலம் – பன்னிரண்டாம் நூற்றாண்டு

**S17. Ans.(a)**
**Sol.** பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் இளமைக் காலத்திலேயே தமிழரின் மொழி, இன, நாட்டு நலக்கொள்கையைப் பின்பற்றிச் செயற்படத் தொடங்கினார். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் மாணவராக இருந்து தமிழில் புலமை கைவரப்பெற்று பாவாணரைத் தமிழுலகம், மொழியியல் உலகிற்கு உயர்த்திக் காட்டியதில் பெரும்பங்கு அவருக்கு உண்டு. 'தென்மொழி' என்ற தனித்தமிழ் இதழ் ஒன்றை நடத்தி, தனித்தமிழ்க்கொள்கை தொடரவும் வெற்றிபெறவும் செய்தார்.

**S18. Ans.(d)**
**Sol.** 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர் அழகிய மணவாளதாசர் எனவும் அழைக்கப்பட்டார். தெய்வக்கவிஞர் என்று பொருள்படும் 'திவ்வியகவி' என்ற பெயராலும் இவரை அழைத்தனர். இவர் இயற்றிய எட்டு நூல்களின் தொகுதியை அஷ்டபிரபந்தம் எனக் கூறுவர். "அஷ்டபிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்" என்னும் பழமொழி இந்நூல்களின் உயர்வைப் புலப்படுத்தும். கி.பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்த இவர் பின்னர் இறைத்தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

**S19. Ans.(a)**
**Sol.** சமணர்களின் புகழ்பெற்ற வரலாற்று சுவர் ஓவியங்கள் (இது அஜந்தா ஓவியங்களைப் போல் உள்ளவையாகும்) இங்குள்ள குகைகளில் காணப்படுகின்றன.

**S20. Ans.(a)**
**Sol.** கிருஷ்ண குமாரசிங் பவசிங் (Krishna Kumarsinhji Bhavsinhji, மே 19, 1912 – ஏப்ரல் 2, 1965) இந்திய மன்னரும் அரசியல்வாதியும் ஆவார். கோகில் பரம்பரையின் கடைசி மன்னராக இவர் பாவ்நகர் இராச்சியத்தை 1919 முதல் 1948 வரை ஆண்டுவந்தார். தமிழகத்தின் முதல் இந்திய ஆளுநராக 1948 முதல் 1952 வரை பணியாற்றி உள்ளார்.

**S21. Ans.(c)**
**Sol.** கல்பாக்கம் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்னையில் இருந்து 70 கி.மீ. தெற்கே கோரமண்டல் கரையில் அமைந்துள்ள ஒரு நகரியம் ஆகும். கல்பாக்கம் பெரும்பாலும் அணு ஆலைகள் மற்றும் அதன் துணை ஆராய்ச்சி நிறுவனங்களுக்குப் புகழ்பெற்றது.

**S22. Ans.(b)**

**Sol.** சென்னை வடக்கிலும் மேற்கிலும் திருவள்ளூர் மாவட்டத்தாலும், தென்மேற்கில் காஞ்சிபுரம் மாவட்டத்தாலும், தெற்கில் செங்கல்பட்டு மாவட்டத்தாலும், கிழக்கில் வங்காள விரிகுடாவாலும் சூழப்பட்டுள்ளது.

**S23. Ans.(b)**

**Sol.** கூடங்குளம் அணுமின் நிலையம், தமிழ் நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில், கூடங்குளத்தில் இந்திய அணுமின் கழகத்தின் நிருவாகத்தில் ரஷ்ய நாட்டின் உதவியுடன் உருவாகிய அணுமின் நிலையமாகும்.

**S24. Ans.(d)**

**Sol.** அமீர் மகால் (Amir Mahal) என்பது ஆற்காடு நவாப் மற்றும் அவரது குடும்பத்தினரின் அதிகாரப்பூர்வ இல்லமாகும். இது சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ளது. இந்த அரண்மனை 1798 ஆம் ஆண்டில் இந்தோ-சரசெனிக் கட்டடக்கலையில் பிரித்தானிய கட்டடக்கலை வல்லுனரான ராபர்ட் சிஸ்ஹோல்ம் என்பவரால் கட்டப்பட்டது.

**S25. Ans.(b)**

**Sol.** வடுவூர் பறவைகள் காப்பகம் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடிக்கும் தஞ்சாவூருக்குமான நெடுஞ்சாலையில் தஞ்சாவூரிலிருந்து 25கிமீ தூரத்தில் உள்ளது.

**S26. Ans.(d)**

**Sol.** காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் பழைய சமய நூல்களில் திருக்கச்சியேகம்பம் எனக் குறிப்பிடப்படுகிறது. தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் தொண்டை நாட்டுத் தலங்களில் ஒன்றாகும். இந்தியாவின் தமிழகத்தில் காஞ்சிபுரம் நகரில் அமைந்துள்ளது. இது பஞ்சபூத தலங்களில் ஒன்றாகும்.

**S27. Ans.(c)**

**Sol.** மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கம், இந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலம், சென்னையில் உள்ள ஹாக்கி விளையாட்டிற்கான ஒரு அரங்கம் ஆகும். இதற்கு எம்.ராதாகிருஷ்ண பிள்ளையின் பெயரிடப்பட்டது.

**S28. Ans.(b)**

**S29. Ans.(a)**

**Sol.** மணிமுத்தாறு அணை என்பது தமிழ்நாட்டின், திருநெல்வேலி மாவட்டத்தில் மணி முத்தாற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணைகளுள் ஒன்று. இந்த ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு பகுதியில் செங்கல்தேரி அருகே பச்சையாற்றின் பிறப்பிடத்திலிருந்து தனியாகப் பிரிந்து மணிமுத்தாறு அருவியாக மணிமுத்தாறு அணைக்கட்டில் வந்து விழுகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்த்தேக்கம் ஆகும்.





**S30. Ans.(b)**

**Sol.** திருமூர்த்தி அணை இந்திய ஒன்றியத்தின் தமிழ்நாடுஅரசின் ஆளுகையில் உள்ள திருப்பூர் மாவட்டத்தில்ன் உடுமலைப்பேட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. இது பாலாற்றின் குறுக்கே கட்டடப்பட்டுள்ளது.


























ஜூலை மாத பதிப்பு
வெற்றி ADDA247
தமிழ்நாடு நடப்பு
நிகழ்வுகள் தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
ரியோ தங்கப்பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலு--- டோக்கியோ பாராலிம்பிக்ஸ்
அகழாய்வில் கத்திகள், குடுவைகள் கண்டுபிடிப்பு -- மயிலாடும்பாறை
மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்-- பீட்டர் அல்போன்ஸ்
குறைகளை நிவர்த்தி செய்ய முதல்வர் ஸ்டாலினின் 100 நாள் இலக்கு--IAS ஷில்பா தலைமையில் குழு
முதுபெரும் தலைவர் N.சங்கரய்யாவுக்கு விருது 'தகைசால் தமிழர்'
Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு பிரிவில் பயின்றிடுங்கள்
கிளிக் செய்க
தேர்ந்திடு வென்றிடு


ஜூலை மாத பதிப்பு
வெற்றி ADDA247
மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் Q&A தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
MATSYA SETU
தமிழில் 270 முக்கிய கேள்விகள்
PDF வடிவில்
பதில்களுடன்
போட்டித் தேர்வுக்கானது
KARGIL VIJAY DIWAS
Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு பிரிவில் பயின்றிடுங்கள்
கிளிக் செய்க
தேர்ந்திடு வென்றிடு


ஜூலை மாத பதிப்பு
வெற்றி ADDA247
மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
MATSYA SETU
இந்திய அக்வா விவசாயிகளுக்காக 'மத்ஸ்யா சேது' app - GoI அறிமுகப்படுத்துகிறது
பாதுகாப்பு அமைச்சகம் SPARSH அமைப்பை செயல்படுத்துகிறது-- Ministry of Defence
இந்திய ஒலிம்பிக் அணி செய்தி இணையாளர் B.K சின்ஹா --IIUI பெயரிட்டுள்ளது
வெற்றிகரமாக ஏவுகணை 'ஆகாஷ்-NG' சோதனை செய்தது- DRDO
கார்கில் விஜய்திவாஸ் ஜூலை 26 கொண்டாடப்படுகிறது- Important Days
KARGIL VIJAY DIWAS
தேசிய, மத்திய, மாநில செய்திகள் & முக்கிய குறிப்புகள்
Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு பிரிவில் பயின்றிடுங்கள்
கிளிக் செய்க
தேர்ந்திடு வென்றிடு


adda247 PUBLICATIONS
பொது பகுப்பாய்வு பாடங்கள் (GS)
வரலாறு | புவியியல் | அரசியல்
பொருளாதாரம் | இயற்பியல்
வேதியியல் | உயிரியல்




**ADDA247 APP க்குச் செல்லுங்கள், தமிழ்நாடு மாநிலத் தேர்வு பிரிவில் பயிலுங்கள்.**

**வெற்றிப்படி நமதே!!!**